TNPSC JOB

# இரண்டாம் பருவ பொது தொகுத்தறித் தேர்வு – 2025

## ஏழாம் வகுப்பு

பதிவு எண் : ☐☐☐☐☐☐

**நேரம்: 2.00 மணி** **தமிழ்** **மதிப்பெண்கள்:60**

### பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **6x1=6**

1. கல்வியைப் போல் __________ செல்வம் வேறில்லை.
   அ) விலையில்லாத ஆ) கேடில்லாத இ) உயர்வில்லாத ஈ) தவறில்லாத
2. மக்களுக்கு வருமானம் கொடுத்து அவர்களைக் காப்பாற்றியது __________
   அ) பற்றுவரவு ஆ) சிக்கனம் இ) கைத்தொழில் ஈ) கப்பல்
3. இவை + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________
   அ) இவை எல்லாம் ஆ) இவையெல்லாம் இ) இதுயெல்லாம் ஈ) இவயெல்லாம்
4. எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் __________
   அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல்
5. செப்பேடு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________
   அ) செப்பு + ஈடு ஆ) செப்பு + ஓடு இ) செப்பு + ஏடு ஈ) செப்பு + யேடு
6. போர் இல்லாத உலகில் __________ நிலவும்.
   அ) பதற்றம் ஆ) காந்தம் இ) சோர்வு ஈ) வெறுப்பு

**பொருத்துக.** **4x1=4**

7. இயற்சொல் – பெற்றம்
8. திசைச்சொல் – சோறு
9. பிடி – முதல் நிலை திரிந்த தொழிற்பெயர்
10. சூடு – முதல்நிலைத் தொழிற்பெயர்

### பகுதி – II

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி.** **6x2=12**

11. துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?
12. ஓவியங்களின் வகைகள் யாவை?
13. மலர்கள் எப்போது தரையில் நழுவும்?
14. இலக்கிய வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
15. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
16. கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?
17. மக்கள் குறையில்லாமல் வாழ, தேயிலைத் தோட்டப் பாட்டு கூறும் வழி யாது?
18. கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.
19. மனிதப் பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?
20. சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் கூறுக.

### பகுதி – III

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** **3x4=12**

21. கேலிச்சித்திரம் என்றால் என்ன?
22. எடுத்துக்காட்டு உவமை அணி என்றால் என்ன?
23. முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.

Scanned with OKEN Scanner

TNPSC JOB | www.tnpscjob.com

24. திரிசொல்லின் வகைகள் குறித்து விளக்குக.
25. கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார் ?

## பகுதி – IV

அடிபிறழாமல் எழுதுக. 2+4=6

26. எண்ணித் துணிக ......... எனத் தொடங்கும் குறட்பா.
27. வைப்புழிக் கோட்படா ........... எனத் தொடங்கும் நாலடியார் பாடலை எழுதுக.

## பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 10x1=10

28. வேர்ச்சொல்லை எடுத்து எழுதுக.
    அ) நடந்தான்    ஆ) படித்தான்
29. முக்கனிகள் எவை ?
30. கலைச்சொற்களைத் தமிழில் எழுதுக.
    அ) Cartoon    ஆ) Discipline
31. இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக.
    அ) மாலை
32. ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.
    அ) ________ பறக்கும்
    ஆ) ________ சுடும்
33. பொருட் பெயர்களை எடுத்து எழுதுக
    அ) பள்ளி    ஆ) காலை    இ) நாற்காலி    ஈ) பந்து
34. பொருள் தருக
    அ) பிராணி    ஆ) பிரபஞ்சம்
35. வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
    அ) இளமைப்பருவம்
36. வள்ளுவர் கோட்டம் ________ யில் உள்ளது.
37. எழுத்துகளை ஒலிக்க ஆகும் கால அளவு ________ எனப்படும்.

## பகுதி – VI

ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி. 1x5=5

38. மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.
39. தமிழ் ஒளிர் இடங்களுள் இரண்டு மட்டும் எழுதுக.

## பகுதி – VII

ஒரு பக்க அளவில் விரிவாக எழுதுக. 1x5=5

40. உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

*(அல்லது)*

கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு 'எங்கள் ஊர்' தலைப்பில் கட்டுரை எழுதுக.
முன்னுரை – அமைவிடம் – பெயர்க்காரணம் – சிறப்பு இடங்கள் – திருவிழாக்கள் முடிவுரை.

***/***



Scanned with OKEN Scanner